திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிந்தள் செடி மூளை வளர்ச்சிக்குப் பயன்படும். அதே மாதிரி, பசுமைகாந்தி உடம்பு வளர்ச்சிக்குப் பயன்படும். தமிழ் நாட்டிலுள்ள பெரும்பகுதி பள்ளி மாணவர்கள் வெறும் நோஞ்சான்களாக இருக்கிறார்கள். அதனால், உணவுடன் இந்தத் துளசியை—டானிக் மாதிரி இருக்கிற காரணத்தால், இதைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? மாணவர்களது பாடப் புத்தகத்தில் இந்த மூலிகையைப் பற்றி விவரித்துச் சொல்ல அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன். (விடை இல்லை.)

இராதாபுரம் தொகுதியில் மினி பஸ் போக்குவரத்து.

*வினா எண் 318—திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் தொகுதியிலுள்ள குக்கிராமங்களுக்கு மினி பஸ் விடும் திட்டம் எதுவும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி, இராதாபுரம் தொகுதிகளில் அநேக கிராமங்களில் உள்ள ரோடுகள் குறுகலாகவும், ஏராளமான வளைவுகளோடும் உள்ளன. இதில், பெரிய பஸ்கள் விட வாய்ப்பில்லையென்று ஹைவேஸ் இன்ஜினியர்கள் கூறுகிற காரணத்தினால், மினி பஸ்கள் விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரோடு குறுகலாக இருந்து, பெரிய வண்டிகள் போகாத இடத்திற்குத்தான் மினி வண்டிகள் விட வேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்து, அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, படிப்படியாக, எங்கெங்கு அப்படி இருக்கிறதோ அந்த இடங்களுக்கு அந்த மினி பஸ்களை விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

1981 பிப்ரவரி 28]

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எல்லா கிராமங்களுக்கும் மினி பஸ்கள் விட ஆவன செய்யும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தற்பொழுது, பேருந்துகளுக்கு அனுமதி கொடுப்பதை நிறுத்தி வைக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவைத் தளர்த்தி விட்டு, மீண்டும் உடனடியாக பேருந்துகளுக்கு பர்மிட் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் ஆட்சிக் காலத்திலே இப்படி பேருந்துகளுக்கு அனுமதி கொடுப்பதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும், இப்பொழுது தற்காலிக உரிமம் வழங்குவதன் மூலம் நாங்கள் அதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி பரிசீலனை செய்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

லாரிகளில் மக்கள் பயணம் செய்வதைத் தடை செய்தல்.

*வினா எண் 319—திரு. இல. பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லாரிகளில் பொது மக்கள் ஏற்றுவதை தடை செய்யும் சட்டத்தினை தளர்த்தும் உத்தேசம் அரசு ஆலோசனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளர்த்துகின்ற எண்ணம் அரசுக்கு இல்லாவிட்டாலும் லாரிகளிலே ஆட்கள் போவது, ஏற்றிச் செல்வது, என்பது இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒன்றில் அதைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டும். இல்லையென்றால், தளர்த்த வேண்டும். இரண்டுக்கும் இடையிலே சில கூட்டங்களுக்குச் செல்லும்போது, அதை அனுமதிப்பதும், சில நேரங்களில் அதைக் கடுமையாகத் தடுப்பதாலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, அரசாங்கம் அதிலே திட்டவட்டமாக முடிவெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மறைமுகமாக ஏதோ வேறு கருத்தைச் சொல்வதைப் போல் தெரிகிறது. எங்களைப் பொறுத்தவரை, லாரி